<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 95/2022</u>

பெயர் : ராமகிருஷ்ணன் P.W.1.

த/பெ. : முத்தையாபிள்ளை

தேதி : 05.02.2024

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது</u>

<u>குறுக்கு விசாரணை:–</u>

நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வெங்கடாசம் பிள்ளை என்பவர் எனக்கு எழுதிக்கொடுத்த உயில் சாசனம் செல்லத்தக்கது என விளம்பல் கோரியும், பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது இலுப்பூர் கிராமத்தில் உள்ளது. உயில் மூலம் எனக்கு புல எண் 254/6, 254/7A, 254/8, 265/1A ஆகிய நான்கு புல எண்களிலும் எனக்கு சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாவா சொத்து வெங்கடாசலம் பிள்ளை என்பவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அது அவருடைய பூர்வீக சொத்தாகும். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் தான் 2 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

வெங்கடாசலம் பிள்ளைக்கு 1ம் பிரதிவாதி மனைவியாவார். 2 முதல் 5 பிரதிவாதிகள் அவரது மகன்கள் மற்றும் மகள் ஆவார்கள். வெங்கடாசலம்பிள்ளை எனது பெரியப்பா மகனாவார். உயிலானது 23.08.2021ல் வெங்கடாசலம் பிள்ளையால் எழுதப்பட்டது. உயிலில் முதல் சாட்சி கையொப்பம் செய்தவர் 3ம் பிரதிவாதி கோவிந்தராஜ் என்றால் சரிதான். தாவா சொத்தில் நெல் பயிரிட்டு வருகிறேன். வெங்கடாசலம் பிள்ளை 10.04.2022ல் இறந்தார். தாவா சொத்தில் பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பிரதிவாதிகள் இடையூறு செய்வதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாவாப்படி செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. செலவுத்தொகை இல்லாமல் அனுமதிக்கவேண்டும்.